DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:S.C.No.118/2025

Prosecution Witness P.W.10

| | |
|---|---|
| Name : **திரு.பரமன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

3–ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. கம்பம் 1–வது வார்டு, கோம்பை ரோடு கம்பத்தில் நான் குடியிருந்து வருகிறேன். நகை அடகு கடை வைத்திருக்கிறேன். கிருஷ்ணா பேங்கர்ஸ் நகை அடகுக்கடை வைத்திருக்கிறேன். எனது கடையானது கோம்பை ரோட்டில் துர்க்கை அம்மன் கோயில் அமைந்துள்ளது, அந்த துர்க்கை அம்மன் கோவிலுக்கு மேற்கு பக்கம் கிழக்கு பார்த்து எனது கடை அமைந்துள்ளது. எனது கடையானது மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. எனது கடையில் இரண்டு கேமராக்கள் சிசிடிவி கேமராக்கள் பொருத்தியுள்ளோம் ஒன்று கடை உள்ளிருந்து வெளியில் பார்க்குமாறு ஒன்று மற்றொன்று வெளியில் வடக்கு திசையை பார்த்தவாறு வைத்திருக்கிறோம். அந்த கேமரா மூலமாக ரோட்டில் செல்வோர், வருவோர் தெரியும் என்றால் சரிதான் .

2. அந்த சாலையானது ஒரு பக்கம் பைபாஸ்க்கும் மற்றொன்று பள்ளிவாசலுக்கும் செல்லும் சாலையாகும். அந்த ரோட்டின் அகலம் 24 அடி. எனது கேமராவை போலீசார் வந்து பார்க்கவில்லை. புகார்தாரர் நாகபாலன் பழக்கவழக்கத்தில் எனக்கு மாமா முறை என்பதால் அவரால் புகார் எழுத

இயலவில்லை என்று என்னை அழைத்ததன் பேரில் நான் போய் அவருக்கு புகார் எழுதுவதற்கு உதவி செய்தேன். புகார் காலை 8.00 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக்கொடுத்தோம். காலை 6:15 மணிக்கு சம்பவயிடத்தில் போலீசார் படம் வரைந்த போது கையெழுத்து போட்டு கொடுத்தோம். சம்பவயிடத்தில் என்னென்ன அமைந்துள்ளது என்பதை விவரமாக சொல்லி அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்தப் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 7 மற்றும் 8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.4, 6 மற்றும் 7 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது, அவை என் முன்னிலை கைப்பற்றப்பட்டவை

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. திவாகர் எனது நண்பர் என்றால் சரிதான். புகார் போலிசார் சொல்ல சொல்ல எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நாகபாலன் புகார் எழுதிக் கொண்டிருந்தார் அவரால் எழுத இயலவில்லை என்று என்னிடம் சொன்னதன் பேரில் அவர் சொல்ல, சொல்ல நான் புகார் எழுதிக் கொடுத்தேன். நான் எழுதிய புகாரில் சாட்சி கையொப்பம் எதுவும் போட்டேனா என்றால் நான் போடவில்லை. நான் உண்மையிலேயே புகார் எழுதியிருந்தால் சாட்சி கையெழுத்து போட்டிருப்பேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கியதாக சொல்லும்போது சுமார் 20 பேர் இருந்திருப்பார்களா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

2. போலீசார் என்னை விசாரிக்கும்போது அந்த சம்பவ இடத்தில் 1.30 – 2.00 மணி நேரம் இருந்திருப்பார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தார்களா என்றால் அவ்வாறு எதுவும் பதிவு செய்யவில்லை. வெறும் கையெழுத்து மட்டும் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் என்ன முடிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். நான் அந்த

தெருவில் தினந்தோறும் போவதால் எனக்கு அது பற்றி தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

3. ஒர்க்ஷாப் கிழக்கு பக்கம், வடக்கு நோக்கி அமைந்துள்ளது. நான் சொன்ன திசையில் அவ்வாறு ஒர்க்ஷாப் இல்லை என்றால் சரியல்ல. நான் நண்பர் என்ற ஆதரவின் அடிப்படையில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 1வது எதிரி சதாம் உசேன் நண்பர்தான். எல்லோரும் எனக்கு நண்பர்கள். தான் சாட்சிகளும் எனக்கு நண்பர்கள் தான் என்றால் எனக்கு அவர்கள் நண்பர்கள் கிடையாது. எனக்கு அவர்கள் தெரிந்தவர்கள் தான். எனக்கு எதிரி தரப்பு வழக்கறிஞரையும் தெரியும். உங்களையும் எனக்கு தெரியும். எல்லோரும் எனக்கு தெரியும்.

4. நான் சொன்ன இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், எழுதாத பேப்பரில் போலீசார் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. படம் வரைந்து திசைகளை குறித்துக்கொண்டு விபரங்கள் அதில் குறிப்பிட்டுள்ளார்கள். புகார் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே புகார்தாரர் எழுதிக் கொண்டிருந்தார் நான் சென்றேன். நான் எழுதி புகார் தாரரிடம் கொடுத்தேன் அவர் போலீசாரிடம் கொடுத்தார். புகார் சம்பந்தமாக போலீசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**<u>4-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

5. சம்பவயிடம் விடிந்து வெளிச்சமாகத்தான் இருந்தது, காலை 6:15 மணி என்பதால் சூரிய உதயமாகிவிட்டது சம்பவ இடத்தில் கைமாஸ் விளக்கோ, பொது விளக்கோ எதுவும் இல்லை என்றால் சரிதான்.. இருட்டாக இருக்கும் நேரம் லைட் வெளிச்சத்தில் நான் எதுவும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பிளாஸ்டிக் சேர்கள் உடைந்து ரத்தக்கறையாக

இருந்தது என்றால் சரிதான். அவற்றை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அவற்றை கைப்பற்றவில்லை பார்த்துக் கொண்டார்கள்.

6. இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் இந்த கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. காயம் பட்டவருக்கு ஆதரவாக சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:24:07 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.